**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.
2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை திங்கள் 15ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.211/2025**

CNR No.TNDG100024912025

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.624/2024

எதிரியின் பெயர் – இளையராஜா 25/2024 த/பெ.கருப்பையா

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | இளையராஜா 25/2024 த/பெ.கருப்பையா, திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம். | 14.11.2024 | 14.11.2024 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 12.11.2024 | 17.11.2025 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 12.03.2026ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரி மீது பிரிவுகள் 281, 125(b)BNSன் கீழ் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:14 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No. | Date of Filing | Result<br><br>Nil |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1 | திரு.செந்தில் | 17.04.2026 | 17.04.2026 |
| | | PW2 | திரு.ரமேஷ் | 17.04.2026 | 17.04.2026 |
| | | PW3 | திரு.செல்லமணி | 17.04.2026 | 17.04.2026 |
| | | PW4 | திரு.சுரேஷ் | 17.04.2026 | 17.04.2026 |
| | | PW5 | திரு.கிருஷ்ணகுமார் | 18.04.2026 | 18.04.2026 |

| | | | |
|---|---|---|---|
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | | 22.04.2026 |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | | Nil |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | | Nil | |

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | கடந்த 11.11.2024ம் தேதி 19.40 மணிக்கு வாதி செந்தில் அவரது TN 57 CW 6988 என்ற பதிவெண் கொண்ட Honda Shine என்ற இருசக்கர வாகனத்தை வாதியின் தம்பி ரமேஷ் என்பவர் ஒட்டிக்கொண்டு பின்னால் வாதி செந்தில் உட்கார்ந்துகொண்டும் உலுப்பகுடி ஊருக்குள் சென்றுவிட்டு மீண்டும் அவர்களது வீட்டிற்கு செல்வதற்காக, திண்டுக்கல் to நத்தம் ரோட்டில் வந்து உலுப்பகுடி ஐயங்கார் பேக்கரி அருகில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி மேற்படி ரோட்டை குறுக்காக கடந்தபோது அந்த ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி TN 63 BS 7690 என்ற பதிவெண் கொண்ட TATA ACE என்ற வாகனத்தை ஓட்டி வந்த எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து வாதி செந்தில் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி வாதி செந்திலுக்கு வலது முழங்காலுக்கு கீழ் இரத்த காயமும், வண்டியை ஓட்டி வந்த வாதியின் தம்பி ரமேஷ்க்கு நெஞ்சில் இரத்த காயமும் ஏற்படுத்தியதாக பிரிவுகள் 281, 125(b) (2 எண்ணிக்கை) BNSன் கீழும் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:19 +0530

| | | |
|---|---|---|
| நீதிபதியின் தீர்மானம் | : | இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) (2 எண்ணிக்கை) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரியை 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| தண்டனை (அ) உத்தரவு | : | எதிரி நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 03.12.2025ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 22.04.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.K.மூர்த்தி வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் வாயிலாக எழுந்துள்ளது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:24 +0530

**<u>2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –</u>**

கடந்த 11.11.2024ம் தேதி 19.40 மணிக்கு வாதி செந்தில் அவரது TN 57 CW 6988 என்ற பதிவெண் கொண்ட Honda Shine என்ற இருசக்கர வாகனத்தை வாதியின் தம்பி ரமேஷ் என்பவர் ஒட்டிக்கொண்டு பின்னால் வாதி செந்தில் உட்கார்ந்துகொண்டும் உலுப்பகுடி ஊருக்குள் சென்றுவிட்டு மீண்டும் அவர்களது வீட்டிற்கு செல்வதற்காக, திண்டுக்கல் to நத்தம் ரோட்டில் வந்து உலுப்பகுடி ஐயங்கார் பேக்கரி அருகில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி மேற்படி ரோட்டை குறுக்காக கடந்தபோது அந்த ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி TN 63 BS 7690 என்ற பதிவெண் கொண்ட TATA ACE என்ற வாகனத்தை ஓட்டி வந்த எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து வாதி செந்தில் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி வாதி செந்திலுக்கு வலது முழங்காலுக்கு கீழ் இரத்த காயமும், வண்டியை ஓட்டி வந்த வாதியின் தம்பி ரமேஷ்க்கு நெஞ்சில் இரத்த காயமும் ஏற்படுத்தியதாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் 30.09.2025ம் தேதி பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230–ன் கீழ் 26.12.2025ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:28 +0530

4. எதிரிக்கு போதிய அவகாசம் அளித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், முதல் நோக்கு ஆதாரங்கள் இருந்ததால் 12.03.2026ம் தேதியன்று எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) (2 எண்ணிக்கை) BNSன் கீழ் குற்றம் குறித்து பிரிவு 263 BNSS –ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

7. கடந்த 11.11.2024ம் தேதி 19.40 மணிக்கு வாதி செந்தில் அவரது TN 57 CW 6988 என்ற பதிவெண் கொண்ட Honda Shine என்ற இருசக்கர வாகனத்தை வாதியின் தம்பி ரமேஷ் என்பவர் ஓட்டிக்கொண்டு பின்னால் வாதி செந்தில் உட்கார்ந்துகொண்டும் உலுப்பகுடி ஊருக்குள் சென்றுவிட்டு மீண்டும் அவர்களது வீட்டிற்கு செல்வதற்காக, திண்டுக்கல் to நத்தம் ரோட்டில் வந்து உலுப்பகுடி ஐயங்கார் பேக்கரி அருகில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி மேற்படி ரோட்டை குறுக்காக கடந்தபோது அந்த ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி TN 63 BS 7690 என்ற

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:34 +0530

பதிவெண் கொண்ட TATA ACE என்ற வாகனத்தை ஓட்டி வந்த எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து வாதி செந்தில் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி வாதி செந்திலுக்கு வலது முழங்காலுக்கு கீழ் இரத்த காயமும், வண்டியை ஓட்டி வந்த வாதியின் தம்பி ரமேஷ்க்கு நெஞ்சில் இரத்த காயமும் ஏற்படுத்தியதாக அ.சா.1 ஆனவர் அ.சா.5 காவல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் என்பவரிடம் அ.த.சா.ஆ.1 புகார் செய்துள்ளார்.

8. மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.5 காவல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் நத்தம் காவல்நிலையக் குற்ற எண்.624/2024 பிரிவுகள் 281, 125(a) BNSஆக அ.த.சா.ஆ.3 முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார். 12.11.2024ம் தேதி 13.00 மணிக்கு சம்பவ இடமான உலுப்பகுடி, அய்யங்கார் பேக்கரி அருகே சென்று சாட்சிகள் அ.சா.4 சுரேஷ், பட்டியல் சாட்சி 6 நடராஜன் ஆகியோர் முன்னிலையில் அ.த.சா.ஆ.4 வரைபடம் மற்றும் அ.த.சா.ஆ.5 பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளான செந்தில், ரமேஷ், செல்லமணி, வனிதா, சுரேஷ், நடராஜன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

9. வழக்கில் சம்பந்தப்பட்ட TN 63 BS 7690 மற்றும் TN 57 CW 6988 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தையும், வாகன தணிக்கை செய்ய அ.த.சா.ஆ.6 மற்றும் அ.த.சா.ஆ.7 வேண்டுகோள் கடிதங்கள் கொடுத்தும், இரண்டு வாகனங்களுக்கும் வாகன சான்று பெற்று மோட்டார்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:39 +0530

வாகன ஆய்வாளர் அ.சா.5 கருப்பசாமி என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றும், 30.09.2025ம் தேதி காயம்பட்ட ரமேஷ் மற்றும் செந்தில் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் பட்டியல் சாட்சி 7 திலீப் ராஜேஷ்குமார் என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.10 மற்றம் அ.த.சா.ஆ.11 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் பெற்றும், இவ்வழக்கின் சட்டப் பிரிவை 125(a) BNS என்பதிலிருந்து 125(b) (2 Counts) BNSஆக சட்டப் பிரிவை மாற்றம் செய்து அ.த.சா.ஆ.12 சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும் புலன் விசாரணையை முடித்து 30.09.2025ம் தேதி எதிரி மீது பிரிவு 281, 125(b) BNSன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

10. அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக பாதகமாக உள்ள சாட்சியங்கள் பற்றி பிரிவு 351(1)(b) of BNSS, 2023−ன் படி 22.04.2026ம் தேதி கேள்விகள் கேட்டபோது, எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

11. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தங்களது வாதத்தில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:45 +0530

12. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததாக கூறுவது உண்மையல்ல என்றும், வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், எதிரி வாகனத்தை மெதுவாக ஓட்டி வந்துள்ளார் என்றும், புகார்தாரரான அ.சா.1 செந்தில் தான் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்தார் என்பதும், காயம்பட்ட சாட்சிகளே மதுபோதையில் இருந்ததை ஒப்புக்கொள்ளும் நிலையிலும், எதிரியுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்றும், எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்து உத்தரவிடவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

<u>**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**</u>

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:49 +0530

**தீர்வு**

14.1. கடந்த 11.11.2024ம் தேதி 19.40 மணிக்கு வாதி செந்தில் அவரது TN 57 CW 6988 என்ற பதிவெண் கொண்ட Honda Shine என்ற இருசக்கர வாகனத்தை வாதியின் தம்பி ரமேஷ் என்பவர் ஓட்டிக்கொண்டு பின்னால் வாதி செந்தில் உட்கார்ந்துகொண்டும் உலுப்பகுடி ஊருக்குள் சென்றுவிட்டு மீண்டும் அவர்களது வீட்டிற்கு செல்வதற்காக, திண்டுக்கல் to நத்தம் ரோட்டில் வந்து உலுப்பகுடி ஐயங்கார் பேக்கரி அருகில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி மேற்படி ரோட்டை குறுக்காக கடந்தபோது அந்த ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி TN 63 BS 7690 என்ற பதிவெண் கொண்ட TATA ACE என்ற வாகனத்தை ஓட்டி வந்த எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து வாதி செந்தில் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி வாதி செந்திலுக்கு வலது முழங்காலுக்கு கீழ் இரத்த காயமும், வண்டியை ஓட்டி வந்த வாதியின் தம்பி ரமேஷ்க்கு நெஞ்சில் இரத்த காயமும் ஏற்படுத்தியதாகவும் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது. எதிரி தரப்பில் வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், காயம்பட்ட நபர் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி வந்து அவரது அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:55 +0530

14.2. எதிரி பொது சாலையில் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து கவனக்குறைவாக செயல்பட்டு அதன் விளைவால் செந்தில் மற்றும் ரமேஷ் ஆகியோருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாக அரசு தரப்பில் கூறப்படும் நிலையில் அதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4, 5 வாயிலாகவும், புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 மூலமாகவும் விபத்தானது உலுப்பகுடி, அய்யங்கார் பேக்கரி அருகே நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி வாகன விபத்து சம்பவத்தின் வாயிலாக செந்தில் மற்றும் ரமேஷ் ஆகியோருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை காயச்சான்றிதழ்கள் அ.த.சா.ஆ.10 மற்றும் அ.த.சா.ஆ.11 வாயிலாக அறிய முடிகிறது. மேலும், ரமேஷ் என்பவர் TN 57 CW 6988 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்பது அ.த.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை வாயிலாகவும், இந்த விபத்தில் சேதமடைந்த மற்றொரு வாகனமான TN 63 BS 7690 என்ற பதிவெண் கொண்ட TATA ACE–ன் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகியவற்றின் வாயிலாக வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

14.3. விபத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 செந்தில் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 7.30 மணியளவில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:48:59 +0530

உலுப்பக்குடி பாலம் அருகே நான், எனது தம்பி ரமேஷ் உடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து நத்தம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்புறமாக திண்டுக்கல்லில் இருந்து வந்த டாடா ஏஸ் வாகனம் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனது வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியம் வாயிலாக விபத்து ஏற்பட்டது என்பதும், அதில் அ.சா.1 மற்றும் அ.சா.2–ற்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. ஆனால் அ.சா.1ன் சாட்சியத்தினை பரிசீலிக்கும் போது எதிரி விபத்தில் சம்பந்தப்பட்ட காரை ஓட்டி வந்ததாகவோ, கார் வேகமாக வந்ததாகவோ எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அ.சா.1ன் சாட்சியம் அமையவில்லை என்பது தெரிகிறது.

14.4. மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் புகார் வாக்குமூலத்தில் நான் செய்த கையொப்பம் ஆனது விபத்து நடந்து மூன்று மாதங்கள் கழித்து நான் வீட்டில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் எழுதப்படாமல் இருந்தது என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் புகார்வாக்குமூலத்தின் உண்மைதன்மை சந்தேகத்திற்குரியதாக உள்ளது. மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் "நானும், எனது தம்பியும் சம்பவத்தன்று மது அருந்தி இருந்தோம் என்றால் சரிதான். சாலையை கடக்கும் போது முறையான விதிகளை பின்பற்றாமல்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:49:05 +0530

கடந்ததில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார். அவரது சாட்சியமானது எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் இல்லை.

14.5. சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.2 ரமேஷ் தனது சாட்சியத்தில் "ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு சுமார் 7.00, 8.00 மணியளவில் நானும், எனது அண்ணனும் எனது அண்ணனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எனது அண்ணனை பின்னால் அமர வைத்து நான் ஓட்டிக்கொண்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து தெற்கில் திரும்பும்போது எங்களுக்கு பின்புறமாக மேற்கிலிருந்து வந்த டெம்போ போன்ற வாகனம் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு வலதுபக்க விலாவில் மூன்று எலும்புகள் உடைந்தும், கை, கால்களில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. மேலும் எனது தலையில் அடிபட்டு இடது காதில் ரத்தம் வழிந்தது. என் அண்ணன் செந்திலுக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது" என்று சாட்சியமளித்து அவர் தனது குறுக்குவிசாரணையில் " சம்பவ சமயம் நானும், எனது அண்ணனும் மது அருந்தி இருந்தோம் என்றால் சரிதான். மோதிய வாகனத்தின் விபரங்கள் தெரியாது என்றாலும் சரிதான். நான் சாலையை கடக்கும் போது இரு புறமும் சரியாக பார்த்து திரும்பவில்லை என்பதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் முன்புறம் பார்த்தேன் பின்னால் பார்க்கவில்லை. நான் பின்னால் பார்த்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளதன் மூலம்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:49:15 +0530

அவர் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்து இருப்பதும் அ.சா.2 மது அருந்தி இருப்பதும், அவர் தான் சாலை விதிகளை முறையாக பின்பற்றாமலும், தனக்கு பின்புறம் வாகனம் வருகிறதா என்பதை கவனிக்காமலும், அவரது கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

14.6. சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 செல்லமணி தனது சாட்சியத்தில் "அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. கடந்த 11.11.2024ம் தேதி மாலை சுமார் 6.45 மணியளவில் என் கணவர் இருசக்கர வாகனத்தில் அவரது தம்பி ரமேஷ் உடன் பின்னால் அமர்ந்து கொண்டு கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது பாலத்தின் அருகே திண்டுக்கல்லில் இருந்து வந்த மினிடோர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்டு ஓடினார்கள். அதை கேட்டு நானும் சென்ற பார்த்தபோது என் கணவரின் வலது கால் உடைந்திருந்தது. என் கணவரின் தம்பி ரமேஷ் மயக்கமாக கிடந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் "சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். போலீசார் என்னை போனில் விசாரித்தார் என்றால் முதலில் போனில் விசாரித்துவிட்டு, பின்னர் வீட்டிற்கு வந்து விசாரித்தார். எனது கணவரும், அவரது தம்பியும் சம்பவத்தின் போது மது அருந்தி இருந்தார்கள் என்றால் சரிதான்" என்று சாட்சியமளித்துள்ளதன் மூலம் அ.சா.3 சம்பவத்தை நேரில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:49:29 +0530

பார்க்கவில்லை என்றும், காயம்பட்ட நபர்கள் தான் மது அருந்தி இருந்தார்கள் என்பது தெரியவருகிறது.

14.7. அ.த.சா.ஆ.5 பார்வை மகஜரில் கையெழுத்து செய்ததாக கூறப்படும் அ.சா.4 சுரேஷ் தனது முதல் விசாரணையில் "சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் எங்கள் வீட்டிலிருந்து 100 அடி தூரத்தில் விபத்து நடந்தது. அதில் செந்தில் மற்றும் ரமேஷ் ஆகியோர் காயம் அடைந்திருந்தனர். அந்த சம்பவம் குறித்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நானும், மற்றொரு நபரும் கையொப்பம் செய்தோம். அவர் யாரென்று தெரியவில்லை" என்றும் சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில் நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் முன்பு அந்த ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார். புலன்விசாரணை அதிகாரி சம்பவம் சென்று விசாரணை செய்துள்ளார் என்பதை அறிய முடிந்தாலும், அவர் சாட்சியின் முன்னிலையில் ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்பது அரசு தரப்பிற்கு பாதகமாகவே உள்ளது.

14.8. இவ்வழக்கில் அ.சா.2 இருசக்கர வாகனத்தை ஓட்ட அ.சா.1 அவருக்கு பின்னால் அமர்ந்து கொண்டு திண்டுக்கல் to நத்தம் ரோட்டில் வந்து உலுப்பகுடி ஐயங்கார் பேக்கரி அருகில் வடக்கில் இருந்து

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:49:34 +0530

தெற்கு நோக்கி மேற்படி ரோட்டை குறுக்காக கடந்தபோது வாகன விபத்தானது ஏற்பட்டுள்ளது. அரசு தரப்பில் ரோட்டை கடக்கும்போது தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், விபத்து எதிரியின் அதிவேகம், கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதாக அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மாறாக, சாட்சியங்கள் வாயிலாக இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்த ரமேஷ் என்பவரும் அவருக்கு பின்னால் உட்கார்ந்து வந்து ரமேஷ்யின் அண்ணான செந்தில் என்பவரும் மது அருந்தி உள்ளார்கள் என்பதை அவர்களே ஒத்துக்கொள்ளும் நிலையிலும், அவர்கள் தான் சாலையை கவனக்குறைவாக திடீரென எவ்வித சிக்னலும் கொடுக்காமல் குறுக்காக ரோட்டை கடக்க முயன்றதில் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என காயம்பட்ட சாட்சிகளே ஒத்துக்கொள்ளும் நிலையிலும், எதிரி தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படாத நிலையிலும், காயம்பட்ட நபர்கள் தான் சாலை விதிகளை பின்பற்றி தனது வாகனத்தை ஓட்டி செல்லவில்லை என்பதும் புலனாகிறது.

14.9. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையிலும், காயம்பட்ட நபரான அ.சா.2ன் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய வரும் நிலையில், அரசு தரப்பு சாட்சியங்களை முழுமையாக பரிசிலனை செய்த வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் விபத்தானது எனது காயம்பட்ட நபர்களின் கவன குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றாலும், மது அருந்தியதில் தான் விபத்து ஏற்பட்டது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.28 07:49:56 +0530

என்றாலும் சரிதான். நான் புகாரில் சொல்லியுள்ளது போல் எதிரி அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்து இருப்பதும் காயம்பட்ட சாட்சிகளே அவர்கள் மீது தான் தவறு என்பதை ஒப்புக்கொள்ளும் நிலையிலும், அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் எதிரி தரப்பு எதிர்வாதத்தை வலு சேர்க்கும் வகையில் அமைந்து இருப்பதும் தெரிய வருகிறது. மேலும் விபத்தில் சம்பந்தப்பட்ட TN 63 BS 7690 என்ற வாகனத்தை எதிரி அதிவேகமாக ஓட்டி வந்ததாகவோ, எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ அதன் விளைவால் தான் செந்தில் மற்றும் ரமேஷ் என்பவர்களுக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, எதிரியின் மீதான பிரிவு பிரிவுகள் 281, 125(b) (2 எண்ணிக்கை) BNSன் படியான படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

15. இறுதியாக, எதிரி மீதான பிரிவுகள் 281, 125(b) (2 எண்ணிக்கை) BNSன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:50:00 +0530

எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**பிரிவு 498 BNSSன் கீழான உத்தரவு:**

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பிரிவு 498 BNSS–ன் கீழ் உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 28.04.2026ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:50:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 17.04.2026 | திரு.செந்தில் (காயம்பட்ட சாட்சி) |
| அ.சா.2 | 17.04.2026 | திரு.ரமேஷ் (காயம்பட்ட சாட்சி) |
| அ.சா.3 | 17.04.2026 | திரு.செல்லமணி (கேள்வியுற்ற சாட்சி) |
| அ.சா.4 | 17.04.2026 | திரு.சுரேஷ் (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.5 | 18.04.2026 | திரு.கிருஷ்ணகுமார் (புலன்விசாரணை அதிகாரி) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 12.11.2024 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.4 | 12.11.2024 | பார்வைமகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.5 | 12.11.2024 | முதல்தகவல்அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 / அ.சா.5 | 12.11.2024 | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.5 | 12.11.2024 | பார்வைமகஜர் |
| அ.த.சா.ஆ.6 / அ.சா.5 | 14.11.2024 | வேண்டுக்கோள் கடிதம் (TN 63 BS 7690) |
| அ.த.சா.ஆ.7 / அ.சா.5 | 14.11.2024 | வேண்டுக்கோள் கடிதம் (TN 57 CW 6988) |
| அ.த.சா.ஆ.8 / அ.சா.5 | 14.11.2024 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 63 BS 7690) |
| அ.த.சா.ஆ.9 / அ.சா.5 | 26.11.2024 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 57 CW 6988) |
| அ.த.சா.ஆ.10 / அ.சா.5 | 11.11.2024 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று (செந்தில்) |
| அ.த.சா.ஆ.11 / அ.சா.5 | 11.11.2024 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று (ரமேஷ்) |
| அ.த.சா.ஆ.12 / அ.சா.5 | 30.09.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :–** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :–**

இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:50:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**<u>குறிப்பு –</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 07:50:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.